# கிளிநொச்சியில் 32 மாணவர்கள் கல்வி இடை விலகினர் தீவிர கவனமெடுக்க பதில் அரசாங்க அதிபர் அறிவுறுத்தல்



கிளிநொச்சியில் குடும்ப பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 32 மாணவர்கள் கல்வி இடை விலகியுள்ளதாக புள்ளிவிபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் அதிக அக்கறை செலுத்துமாறு பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் அறிவுறுத்தல் வழங்கியுள்ளர். மாவட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடலிலேயே இவ்வாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முதல்காலாண்டுக்கான கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் போது, சிறுவர்களின் பாதுகாப்பு, கல்வி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 32 மாணவர்கள் கல்வி செயற்பாட்டிலிருந்து இடை விலகியதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், 29 பேர் மீள் இணைக்கப்பட்டதாகவும் புள்ளிவிபரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டது.

மேலும் இருவரை மீள் இணைக்க நடவடிக்கை 2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 07 புதன்கிழமை 20.03.2024 கதிர் 206

## போராட்டக்காரர்கள் திடீரென யாழ். இந்தியத் தூதரகத்தை நோக்கிச் சென்றதால் பரபரப்பு

*2வது நாளாக உண்ணாவிரதம்!*



இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டைக் கண்டித்து யாழ்ப் பாணம் மாவட்ட மீனவர்கள் இன்று காலை யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை 2➤

## இலங்கையை முன்னேற்றக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணிலே

### கிழக்கு ஆளுநர் செந்தில் தெரிவிப்பு



ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருவதாகவும், கிழக்கு மாகாணத்தை முழுமையாக அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டின் கடன் நெருக்கடியைத் தீர்க்க முடியும் எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியை வெற்றிகரமாக கையாண்டு, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2➤

## ஜனாதிபதித் தேர்தலில் சஜித் வெற்றி பெற்ற பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடக்குமாம்

### *திஸ்ஸ அத்தநாயக்க கூறுகின்றார்*



ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ

வெற்றி பெற்ற பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் மாகாண சபைத் தேர்தலும் விரைவில் நடத்தப்படும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஜனாதிபதியால் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மற்றும் 2➤

## மருந்தாளர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு கிளிநொச்சி வைத்தியசாலையும் பாதிப்பு



வைத்தியசாலைகளின் மருந்தாளர்கள் மேற்கொண்டிருக்கின்ற பணிப்புறக்கணிப்பு காரணமாக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் செயற்பாடுகளும் பாதிப்படைந்திருப்பதை காணமுடிந்தது.

பதவியுயர்வு, மற்றும் புதிய ஆளணியை நிரப்ப வலியுறுத்தியே குறித்த பணிப்புறக்கணிப்பில் அவர்கள் ஈடுபட்டனர்.

இன்றைய தினம் மாதாந்த சிகிச்சை நாள் என்பதால் சிகிச்சைக்கு வந்த நோயாளர்கள் மருந்துகளைப் பெற முடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

மாதம் ஒருமுறையாவது இப்படியான பாணிப் பகிஷ்கரிப்பு இடம்பெறுவதனால் அப்பாவி நோயாளர்களாகிய தாங்களே பதிக்கப்படுவதாக அங்கு வந்திருந்தவர்கள் கவலை தெரிவித்தனர். (02)

## இன்று மாலை கனடா பறக்கிறார் அநுரகுமார

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இன்று மாலை கனடாவுக்குப் புறப்படுகின்றார். கனடாவாழ் இலங்கையர்களுடனான சில சந்திப்புகளில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு செல்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியின் கனேடிய குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரதானமான இரு மக்கள் சந்திப்புக்களின் முதலாவது சந்திப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கனடாவின் டொரண்டோ நகரிலும், இரண்டாவது சந்திப்பு 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வான்கூவர் நகரிலும் இடம்பெறவுள்ளன.

இந்தப் பிரதான மக்கள் சந்திப்புகளுக்கு மேலதிகமாக கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களுடன் சகோதரத்துவ சந்திப்புகளிலும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்பார். (அ)

## ஜனாதிபதி வேட்பாளர் யார்? ‘மொட்டு’ இந்த வாரம் முடிவு

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் தொடர்பில் முடிவெடுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் விசேட கூட்டம் இவ்வாரம் நடைபெறவுள்ளது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான மொட்டுக் கட்சி வேட்பாளர் தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது-

“எமது கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ மற்றும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் இந்த வாரத்துக்குள் கூடி இது பற்றி ஆராய்வார்கள். இந்தக் கூட்டத்தின் பிரகாரம் எமது வேட்பாளர் விரைவில் அறிவிக்கப்படுவார். சவாலை ஏற்கக்கூடிய வெற்றி வேட்பாளர் ஒருவரை நிறுத்துவோம்.” - என்றார்.

அதேவேளை, தேசிய மக்கள் 2➤

## இலங்கையை.....

என்பதால் அவருக்கு ஆதரவளிக்க வேண்டியது அனைத்து தரப்பினரின் கடமை எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (19) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஆளுநர் செந்தில் தொண்டமான்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், நாம் கிழக்கு மகாணத்தில் தற்போது பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். முப்பது வருட யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மாகாணம் என்பதால் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணம் வளர்ச்சியில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. எனவே, இந்த மாகாணத்திற்குரிய மூன்று மாவட்டங்களினதும் வளர்ச்சியில் அதிக கவனம் எடுக்குமாறு ஜனாதிபதி எனக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதற்காக கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் உள்ள வளங்கள் தொடர்பில் நாம் தற்போது கண்டறிந்துள்ளோம். உதாரணமாக இறால் வளர்ப்பு, கனிய வளங்கள், துறைமுகம், விமான நிலையம், நீர் வளம், சுற்றுலாத் துறை மற்றும் விவசாய நிலங்கள் போன்றவற்றை எவ்வாறு நாம் அபிவிருத்தி செய்வது குறித்து அவதானம் செலுத்தியுள்ளோம். எனவே, இவற்றை மேம்படுத்துவதன் மூலம் எமது நாட்டின் கடன்களை அடைப்பதற்கு கிழக்கு மாகாணம் மாத்திரம் போதுமானது என்பதைக் கூற வேண்டும்.

அந்தளவு வளங்கள் கிழக்கு மாகாணத்தில் இருக்கின்றன. அவற்றை முறையாக அபிவிருத்தி செய்ய வேண்டும். எதிர்காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைத் திருப்பிச் செலுத்தும்போது கிழக்கு மாகாணம் அதற்கு நிதிப் பங்களிப்பை வழங்க முடியும் என்று நான் நினைக்கின்றேன்.

எதிர்காலத்தில் முழு நாட்டுக்கும் பொருளாதார பங்களிப்பை வழங்கும் முதல் மாகாணமாக கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

மேலும் மலையக மக்களின் சம்பளப் பிரச்சினையைப் பொருத்தவரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்ட மக்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். அதற்காக பெருந்தோட்டக் கம்பனிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றன.

பொதுவாக இரண்டு வருடங்களில் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். ஏற்கனவே ஒரு வருடம் தாமதமாகி உள்ளது. இதற்காக நாம் சம்பள நிர்ணய சபைக்கு சென்றுள்ளோம். தற்போது பெருந்தோட்டக் கம்பனிகள் அவர்களின் முன்மொழிவுகளை வழங்கியுள்ளன. பெருந்தோட்டத் தொழில் என்பது அந்நியச் செலாவணியுடன் தொடர்புபட்டது. எனவே, டொலரின் பெறுமதி அதிகரிப்பிற்கு ஏற்பவும் உள்நாட்டு வாழ்க்கை செலவினைப் பொருத்துமே சம்பளம் தீர்மானிக்கப்பட வேண்டும். விரைவில் மலையக மக்களுக்கு நல்ல சம்பளம் கிடைக்கும் என நாம் நம்புகின்றோம்.

எமது நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தற்போது இருக்கும் ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. அவர் அதனை செய்தும் காட்டியுள்ளார். எரிபொருள் இல்லை, மின்சாரம் இல்லை. உணவு இல்லை. மருந்துகள் இல்லை என அன்று இருந்த அதே அரசை நடத்திச் செல்ல முடியாது என அனைவரும் கைவிரித்தபோது, அதே அரசை எடுத்து அதனைத் தற்போதைய ஜனாதிபதி செய்து காட்டியுள்ளார்.

எதிர்காலத்தில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்ற முடியாது. தற்போதுள்ள வரி விதிப்புகள் அனைத்தும் ஜனாதிபதி விரும்பி ஏற்படுத்தியவை அல்ல. மாறாக சர்வதேச நாணய நிதியம் எமது நாடு பொருளாதார ரீதியில் மீண்டு வருவதற்காக இட்ட நிபந்தனைகளாகும்.

நாம் விரைவில் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டு அதில் இருந்து வெளியே வர வேண்டும் என்பதற்காகவே பல்வேறு வேலைத் திட்டங்களை ஜனாதிபதி முன்னெடுத்து வருகின்றார். ஏனைய நாடுகள் நாம் எவ்வாறு ஒரு குறுகிய காலத்தில் பொருளாதார ரீதியில் மீண்டு வந்தோம் என்பதை ஆராய்கின்றது. பல்வேறு நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு கிடைத்தும் இன்னும் மீட்சி பெறாமல் இருக்கின்றன. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்து சில மாதங்களிலேயே எமது நாட்டை மீட்டெடுத்து விட்டார். பிரச்சினைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டதாகக் கூறவில்லை.

ஆனால், இன்னும் ஒரு வருடத்திற்குள் எமது நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கே முயற்சி எடுத்து வருகின்றார். ஜனாதிபதி பதவி என்றால் என்ன என்பதையே தெரியாத ஒருவருக்கு நாட்டைப் பொறுப்பளித்தால், அதனைப் பற்றி அறிந்துகொள்ளவே அவர்களுக்கு இரண்டு மூன்று வருடங்களாகும். அதற்குள் மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சியை நோக்கி எமது நாடு சென்றுவிடும் வாய்ப்பு உள்ளது.

நாம் ஏற்கனவே பல தேர்தல்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக செயற்பட்டவர்கள். ஆனாலும், தற்போது அவரைத் தவிர வேறு எவரும் இந்த நாட்டை மீட்டெடுக்கக் கூடியவர் இல்லை. எனவே, நாம் தற்போதுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்த தீர்வாக இருக்க முடியும்.” - என்றார். (அ)

## ஜனாதிபதித் தேர்தலில்.....

மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்த வேண்டியுள்ளது. அதிகாரப் பகிர்வு கோட்பாட்டின் அடிப்படையில்தான் மாகாண சபை உருவாக்கப்பட்டது. அந்தச் சபைகளை ஆளுநர்கள்தான் தற்போது நிர்வகிக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இதுகூட அரசமைப்பு மீறல் செயலாகும்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்ற பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ் அதன்பின்னர் கூடிய விரைவில் மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும். மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்போம்.” – என்றார்.

## கிளிநொச்சியில் 32.....

எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் 11 மாணவர்களும், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் 2 மாணவர்களும் அடையாளம் காணப்பட்டு மீள் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் 5 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு மூவர் கல்விக்காக மீள் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் 14 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு 13 பேர் மீள் இணைக்கப்பட்டுள்ளனர்.

குடும்ப பொருளாதாரம், வறுமை, பெற்றோரின் அக்கறையின்மை உள்ளிட்ட காரணங்களால் இவ்வாறு மாணவர்களின் கல்வி இடைவிலகவிற்கான அதிக காரணமாக அமைந்துள்ளதாக உத்தியோகத்தர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை ஒழுக்காற்று நடவடிக்கை எனும் பெயரில் 6 மாதங்கள் வரை மாணவர்களை இடை நிறுத்திய சம்பவமும் இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த ஒழுக்காற்று நடவடிக்கையினால் இடைவிலகல் ஏற்படாத வகையில் இருக்க வேண்டும் எனவும், அவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படின் அவ்விடயம் தொடர்பில் அறிவித்தல் வழங்கப்பட வேண்டும்.

வலயக் கல்வி பணிமனைக்கு அறிவித்தல் வழங்கப்படும் அதே வேளை, பிரதேச செயலகத்துக்கும் அறிவித்தலை வழங்க வேண்டும்.

பாடசாலை கல்வி, பாதுகாப்பு தொடர்பில் தொடர் அதிக கண்காணிப்பு அவசியம் எனவும், பிரதேச செயலகங்களில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் கூட்டங்களை நடத்த வேண்டும், எனவும் பதில் அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

சிறுவர்களின் கல்வி மற்றும் ஒழுக்கம் தொடர்பில் பெற்றோருக்கு விழிப்புணர்வையும், ஆலோசனைகளையும் மேற்கொள்ள வேண்டும், எனவும் அவர் தெரிவித்தார். (02)

## போராட்டக்காரர்கள் ...

கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் நான்கு பேர் முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்று இரண்டாவது நாளாகவும் தொடர்கின்றது.

யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக இன்று காலை வருகை தந்த மாதகல் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் இணைந்து பேரணியாக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்பாகச் சென்று கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டக்காரர்கள் திடீரெனத் தூதரகத்தை நோக்கிச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டதால் சிறிது நேரம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

சிறிது நேரப் போராட்டத்தின் பின்னர் மீனவர்கள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்து தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

திடீரென மீனவர்கள் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தை நோக்கிச் சென்றதால் உடனடியாக அதிகமான பொலிஸார் வரவழைக்கப்பட்டு தூதரகத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், மீனவர்கள் தொடர்ந்தும் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற அதேநேரத்தில் அவர்களுக்கு ஆதரவாகப் பல்வேறு இடங்களிலும் இருந்து மீனவர்கள் வருகை தந்து ஆதரவை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதி வேட்பாளர் .....

சக்தியுடன் கூட்டணி அமைப்பதற்குத் தாம் தயாரில்லை என்றும் ரோஹித அபேகுணவர்தன எம்.பி. மேலும் தெரிவித்தார். (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# சர்வதேச நீர் தின விழிப்புணர்வு கலாசாலையில் ஒன்றுகூடல்



ஒவ்வோராண்டும் மார்ச் 22 ஆம் திகதி அனுட்டிக்கப்படும் சர்வதேச நீர்தினம் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் சிறப்பு ஒன்றுகூடல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இன்று இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விஞ்ஞான நெறியைச் சேர்ந்த ஆசிரிய மாணவி வீரராகவன் மாயாதேவி நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தினார். ஆசிரிய மாணவர் உரையை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவி தவராசா ஜீற்றா ஆற்றினார்.

இவ்வாண்டு நீர்த்தினத்திற்கான தொனிப்பொருளாக அமையும் அமைதிக்கான நீர்ப்பங்கீடு (Leveraging Water for Peace) என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு நீர்த்தினம் பற்றிய சிறப்புரையை வடமாகாண விவசாய அமைச்சு உத்தியோகத்தர் நடராஜா ஐங்கரன் வழங்கினார். அதிதிக்கான அறிமுகவுரையை விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் மேற்கொண்டார்.

ஆசிரிய மாணவர்கள் தயாரித்த நீர்ப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு ஆவணப் படமும் இதன்போது காட்சிப் படுத்தப்பட்டது.

சிறப்புரையாற்றிய ந.ஐங்கரன் கலாசாலைச் சமூகத்தால் கௌரவிக்கப்பட்டதோடு ஆவணப்படம் தயாரித்த ஆசிரிய மாணவர்களை சபையோர் எழுந்து நின்று கரகோஷித்துப் பாராட்டுத் தெரிவித்துக் கௌரவித்தனர்.

# ‘வேள்வித் திருமகன்’ திருப்பாடுகளின் நாடகம் நாளை ஆரம்பமாகின்றது

திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு ‘வேள்வித் திருமகன்’ என்னும் பெயரில் நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238 , பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருப்பாடுகளின் நாடகமரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது.

இம்முறை மேடையேற்றப்படும் ‘வேள்வித் திருமகன்’ திருப்பாடுகளின் நாடகம் முதன்முதலாக 2012 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2014 ஆம் 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப் பட்டது. தற்போது நான்காவது தடவையாக மேடையேற்றப் படுகின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தினை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ.மரியசேவியர் அடிகளாரே எழுதியுள்ளார். அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே’ வேள்வித் திருமகன்’. மரிய சேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளில் இருந்து மொழிநடையிலும், பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்ட இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்தியதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழமை போல் பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகையில் பங்கேற்கின்றார்கள்.



# மிதி வெடி

போன கிழமை பெரிய பள்ளிக்கூடத்துத் திருவிழா கடுமையாக் களைகட்டி இருந்தது. திருவிழா களைகட்டினது எண்டதைத் தாண்டி அயலிலை இருந்த “பார்” எல்லாத்துக்கும் கடும் உழைப்பாம் பாருங்கோ....

“கம்பஸ்” பக்கத்தில இருக்கிறதால பக்கத்தில “மருந்து” விக்கிற எல்லாருக்கும் பிழைப்புக்குப் பங்கம் இல்லை. அந்த “உறை” உட்பட மருந்து - மாத்திரை வரை அதிகமா விக்கப்பட்டிருக்கு. கேட்டால் நாங்கள் தான் “கலாசாரத்தின் காவலர்கள்” எண்டு சொல்லுகினம்....?

“நரமுனிக் கென்ன சொல்லிப் போட்டியள் நாங்கள் தான் சொன்னனாங்கள் எண்டு எங்களையெல்லோ அறுக்கப் போயினம்?” எண்டு ஏகப்பட்ட அழைப்புகள். தனிய வெளிவாரியில எண்டு மட்டுமில்ல உள்வாரியாவும் நிறையக் குத்து வெட்டுகள் நடக்குது. அதையும் எழுதுங்கோவன்? எண்டு “பெருத்த” ஆசிரியர்மார் கூட அழைப்பெடுத்து அழுகினம்.

அஞ்ஞானம் நீக்கிற பீடத்தில இருக்கிறவர அப்புறப்படுத்திப் போடவேணும் எண்டதுக்காக பிள்ளையளைப் பாடப்படுத்துகினமாம். கொரோனா... அது, இதுவெண்டு அல்லாடிப் போன பிள்ளையளிண்ர வரவு காணாது எண்டு “எக்ஸாம்” எழுத விடாதது தான் பிரச்சினையாம். பீடத்துக்குத் தலைமை தாங்கிறவருக்குத் தகுதி இருக்குதோ இல்லையோ, அவர் வந்த வழியில தள்ளி விட்டுட்டு வந்தவையெல்லாருமாத் தான் இப்ப துள்ளி விளையாடுகினமாம் பாருங்கோ....

எதுக்கெடுத்தாலும் பெட்டிசன் அடிக்கிற பெரிய ஆசான் இந்த முறை அடக்கித் தான் வாசிக்கிறார் போல... மனித உரிமையெண்டு மனுசன் மாணவர்களைக் கிண்டி விட்டு மூக்குடைபட்டதுக்குப் பிறகு தெளிஞ்சுட்டார் போல..?

ஜனரஞ்சகமாகக் கதைக்கக் கூடியவர் தான் இப்ப பிள்ளையளோட கடுமையா ஒட்டுறாராம்.... “பப்ளிக்கா” ஒரு அறிக்கை விடுங்கோ.... “பிரஸ் மீற்” வையுங்கோ.... நாங்கள் உங்களுக்கு “சப்போர்ட்” பண்ணுறம் எண்டு ஒரு பக்கம் பெடியளக் கிண்டி விட்டுட்டு, மறுபக்கம் பீடச் சபையில சட்டம் பேசுறதும் அவர் தானாம்.... “பிள்ளையையும் நுள்ளி.... தொட்டிலையும் ஆட்டுறது” எண்டது இது தான் போல.... அதை விடுவம்... பெரிய இடத்து விவகாரம் - நமக்கெதுக்கு வம்பை?

இங்கால ஊருக்குள்ள நல்ல ஊர்.... அதானுங்கோ நல்லூரில இருக்கிற அம்மணிமாரிண்ட கதை கொஞ்சம் அமளி, துமளிப்படுகுது. அதிகாரத்துக்கு இப்ப வந்திருக்கிற அம்மணி, ஏற்கனவே தன்னோட இருந்திட்டு வந்த அம்மணி ஒருத்தியோட சேர்ந்து கடும் அடாவடியாம்.... கேள்விப்பட்டிருப்பியள்..!

எப்பவும் ஒரு ஆட்சி மாற்றம் வந்தால் முன்னையவரோட இருந்தவையைப் பின்னையவர் ஒதுக்கி வைக்கிறது இயல்பு தானே? அது போலத் தான் முந்தின “டி.எஸ்”க்கு “ஏ.டி.எஸ்” ஆ இருந்தவாவை இப்பத்தை அம்மணிக்குக் கண்ணிலையும் காட் ட ஏலாதாம். எப்பிடிப்பட்டும் அனுப்பிப் போட வேணும் எண்டு துடிக்கினம். ஒரு ஆளைப் பிடிக்கேல்ல எண்டால், வழக்கம் போல “கள்ளர்” எண்டுவினம், இல்லாட்டி “வேற மாதிரி”ச் சொல்லுவினம். இது தான் இப்ப அங்க நடக்குதாம்.......

அதிகார அம்மணிக்கும், அடுத்தவாக்கும் நடக்கிற இழுபறிக்குள்ள குளிர்காயுறதுக்கெண்டு இங்கால இன்னுமொரு கூட்டம் அலையுது பாருங்கோ... “கப்பில கடா வெட்டுறது” எண்டு சொல்லுவினம்? அதைப் போல கிடைக்கிற இடைவெளியில “கவிதை” நல்லாப் பூந்து விளையாடுதாம்....!

போனமுறை அதிகாரத்தில இருந்தவா உண்மையில “அரசி” தான் பாருங்கோ... தனக்குக் கீழ இருக்கிற ஆக்களோட கொஞ்சம் கறாராய் இருந்தாலும், நீதி வழுவாத ஆட்சி தான்....!

“பெட்ரேலுக்கு”த்கட்டுப்பாடு வந்த காலத்தில கச்சேரியில இருந்தவையெல்லாம் தங்களுக்குத் தெரிஞ்சவை - போனவை, வந்தவைக்கெல்லாம் செல்வாக்குப் “பெமிட்” குடுக்கேக்க இந்த மனுசியும், அடுத்த “லெவலில” இருந்த அம்மணியுமாச் சேர்ந்து நேரங்காலம் பாராமல் இராப் பகலா ஒவ்வொரு “ஷெட்”க்கும் நேராப் போய் பங்கீடு செய்தவை....!

அது போலத் தான் தனக்குக் கீழ வேலை செய்யுற எல்லாருக்கும் சட்டம் எண்டால் ஒண்டு தான் எண்டு விடாப்பிடியா நிண்டவா.... இப்ப அவவாவுக்கு “ட்ரான்ஸ்பர்”. தமிழரிண்ட தலைநகருக்குப் போயிற்றா.... அவவிண்ர இடத்துக்கு இப்ப வந்திருக்கிறவாவும்... அடிப்படையில நல்லவா. ஆனாலும் பாருங்கோ சேருற கூட்டம் பிழைச்சால் எல்லாம் பிழைச்செல்லோ போயிடும்.....

எல்லாப் பிரதேச செயலகங்களிலையும், சமூக சேவைக்கெண்டு நிதி கனக்க வாறது தானே...? அந்த நிதியில கனக்கப் பிழையாகக் கையாளப்படுகுதாம். அதிகாரத்தில இருக்கிற அம்மணி கண்டும் காணாதது போல இருக்கிறாவாம். ஏனெண்டால்... அந்த அதிகார அம்மணி இங்க வர முன்னம் இருந்த இடத்தில தான் இந்த அம்மணியும் இருந்தவவாம். பிள்ளையளை ஏத்தி இறக்கினதில இருந்து எல்லாத்தையும் கவனிச்ச படியால, இவவுக்கு அலுவலகத்தில “ஸ்பெஷல்” கவனிப்பாம். பிழை எண்டால் லேசுப்பட்ட பிழை இல்லப் பாருங்கோ... முறைகேடு. ஆனாலும் அதிகார அம்மணி கண்டுகொள்ளுறதே இல்லையாம்!

ஒராளுக்குக் குடுக்க வேண்டியதை இன்னொரு ஆளுக்குக் குடுத்துப்போட்டு, வீட்டுக்குப் போய் திரும்ப வேண்டுகினமாம்... உரியவருக்குக் கிடைக்குதோ இல்லையோ எண்டதுக்கு எந்த உறுதிப்பாடும் இல்லை. அம்மணி வீட்டுக்குப் போய் மாத்தித் தந்திட்டம் திரும்பத் தாங்கோ எண்டு கேட்டு, குடுக்க மாட்டம் எண்டுற ஆக்களுக்கு அம்மணி அதிகாரத்தைக் கொண்டு மிரட்டல் வேறயாம்.... எப்பிடிப் போகுது பாருங்கோ எங்கட அரசாங்க இயந்திரம்...?

*“இருக்கிற இடத்தில இருந்தால் எல்லாம் சௌக்கியம்”* தான்!

*-நரமுனி-*

# ஹொங்கொங்கில் புதிய சட்டமூலம் நிறைவேற்றம் அடக்குமுறைகள் அதிகரிப்பதாக குற்றச்சாட்டு!

ஹொங்கொங்கில் அரசுக்கு எதிரானவர்கள் மீது அடக்குமுறையைக் கையாள வகை செய்யும் மேலும் ஒரு சட்டத்தை அந்தப் பிரதேச பேரவை நேற்று செவ்வாய்க்கிழமை நிறைவேற்றியுள்ளது.

ஹொங்கொங்கில் சீனா அமல்படுத்தியுள்ள சர்ச்சைக்குரிய தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில், அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு மேலும் கடுமையான தண்டனைகளை விதிக்கும் அம்சங்களை 23 ஆவது சட்டப்பிரிவாக சேர்ப்பதற்கான தேசிய பாதுகாப்பு காவல் சட்டமூலம்' பேரவையில் கொண்டுவரப்பட்டது.

அந்த மசோதா மீதான வாக்கெடுப்பு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில், பேரவை உறுப்பினர்கள் அனைவருமே சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதையடுத்து அந்த சட்டமூலம் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து பேரவைத் தலைவர் அண்ட்ரூ லியங் கூறுகையில், 'தேசிய பாதுகாப்பு காவல் சட்டமூலம்' அவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு. தலைமை ஆட்சியாளர் ஜான் லீ காசிபு கூறியதைப் போல், அந்த மசோதா எவ்வளவு விரைவாக சட்டமாகிறதோ அவ்வளவு விரைவாக ஹொங்கொங்கின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்' என்றார்.

இந்த புதிய சட்டம் வரும் சனிக்கிழமை முதல் அமலுக்கு வரும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரிட்டன் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்த ஹொங்கொங், சீனாவிடம் கடந்த 1997 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. அதுவரை ஜனநாயக உரிமைகளை அனுபவித்து வந்த ஹொங்கொங் மக்களுக்கு, சீனாவின் மற்ற பகுதிகளில் இல்லாத சுதந்திரம் அளிக்கப்படும் என்று அப்போது உறுதியளிக்கப்பட்டது.

எனினும், ஜனநாயக சீர்திருத்தங்களை வலியுறுத்தி அந்த நகரில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டங்களை ஒடுக்கும் வகையில், சர்ச்சைக்குரிய தேசிய பாதுகாப்புச் சட்டத்தை சீனா நிறைவேற்றியது. அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, போராட்டத்தில் ஈடுபட்ட பலரை ஹொங்கொங் அரசு சிறையில் அடைத்துள்ளது.

போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த அப்பிள் டெய்லி என்ற நாளிதழ் முடக்கப்பட்டுள்ளது. அந்த நாளிதழின் நிறுவனர் ஜிம்மி லாய், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். இது தவிர, ஜனநாயக ஆதரவு இயக்கத்தின் பலர் அந்தச் சட்டத்தின் கீழ் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், சீனாவின் எதேச்சதிகாரத்துக்கு எதிராகவும், ஜனநாயக சீர்திருத்தங்களுக்கு ஆதரவாகவும் ஹொங்கொங்கில் எழக்கூடிய குரல்களை மேலும் நசுக்கும் வகையில் இந்தப் புதிய சட்டம் தற்போது இயற்றப்பட்டுள்ளதாக மனித உரிமை ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

புதிய சட்டத்தின் கடுமையான அம்சங்களாக, தேசத் துரோகம், அரசு எதிர்ப்பு, சதிக் குற்றங்கள் உறுதி



செய்யப்பட்டவர்களுக்கு ஆயுள் தண்டனை, வெளிநாட்டு அரசுகளின் ஆதரவோடு பொதுச் சொத்துக்கு சேதம் விளைவித்தால் ஆயுள் தண்டனை, ஹொங்கொங் அரசை வேவு பார்ப்பவர்களுக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை, அரசின் ரகசியங்களைக் கசிய விட்டால் 10 ஆண்டுகளுக்கு சிறைத் தண்டனை - ஆகியன உள்ளன.

இந்தப் புதிய சட்டம் ஹொங்கொங் மக்களின் அடிப்படை உரிமைகளை மேலும் பறிப்பதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. இருந்தாலும், ஹொங்கொங்கின் பொருளாதார வளர்ச்சிக்கு இது வித்திடும் என்று சீன ஆதரவாளர்கள் கூறுகின்றனர். (04)

# பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள காஸா மக்கள் போர் உத்தியாக அதை இஸ்ரேல் பயன்படுத்துகிறது!

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் குற்றச்சாட்டு



பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ள காஸா மக்களுக்கு உணவுப் பொருள்கள் கொண்டு செல்லப்படுவதற்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிப்பதை ஒரு போர் உத்தியைப் போல் இஸ்ரேல் பயன்படுத்துவதாக ஐ.நா. குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டர்க் கூறியபோது, பல மாதங்களாக முற்றுகை யிடப்பட்டுள்ள காஸாவில் உணவுப் பொருள்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. அங்கு பொதுமக்கள் பசியால் வாடுகின்றனர். ஏராளமானவர்கள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர்.

காஸாவுக்குள் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல இஸ்ரேல் படையினர் கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பதே இந்த நிலைமைக்குக் காரணம். காஸாவுக்குள் நிவாரணப் பொருள்கள் கொண்டு செல்லப்படுவதில் இஸ்ரேல் ராணுவம் காட்டும் கெடுபிடி, அங்கு மக்கள் உணவில்லாமல் தவிக்கும்போதும் தொடரும் தாக்குதல் ஆகியவை இந்தப் போரில் வெற்றி காண்பதற்கான உத்தியாக மக்களின் பட்டினி விவகாரத்தை இஸ்ரேல் பயன்படுத்துவதாகக் காட்டுகிறது, என்றார்.

வோல்கர் டர்க்கின் செய்தித் தொடர்பாளர் ஜெரிமி லாரன்ஸ்பின்னர் கூறுகையில், 'பொதுமக்களின் பட்டினியை போர் உத்தியாக இஸ்ரேல் பயன்படுத்துவதை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்தான் உறுதிசெய்யவேண்டும்' என்றார்.

இஸ்ரேலுக்குள் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி நுழைந்து ஹமாஸ் படையினர் சுமார் 1,200 பேரை கொலை செய்து பலரைப் பணயக் கைதிகளாகப் பிடித்துச் சென்றதாகக் கூறப்படுவதற்குப் பதிலடியாக, காஸாவில் இஸ்ரேல் ராணுவம் தொடர் தாக்குதல் நடத்திவருகிறது.

அந்தப் பகுதியை ராணுவம் முற்றுகையிட்டுள்ளனால் அங்கு சுமார் 3 லட்சம் பேர் கடும் பஞ்சத்தை எதிர்நோக் கியுள்ளதாகவும் ஐ.நா. கூறியுள்ளது. (04)

# உக்ரைனின் தொடர் தாக்குதல் 9,000 சிறுவர்களை அகற்ற முடிவு



உக்ரைனின் தொடர் தாக்குதல் காரணமாக, ரஷ்ய எல்லைப் பகுதியான பெல்கராடில் இருந்து சுமார் 9,000 சிறுவர்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்படுத்த அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து பிராந்திய ஆளுநர் வியாசெஸ்லவ் கிளாட்கொவ் கூறியபோது, பெல்கராட் பகுதி மீதான எறிகணைத் தாக்குதல்களை உக்ரைன் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 9,000 சிறுவர்கள் பாதுகாப்புக்காக அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ளனர். உக்ரைன் எல்லைக்கு வெகு தொலைவில் உள்ள கிழக்குப் பகுதிக்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள், என்றார்.

முன்னதாக, ரஷ்யாவின் அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட விளாடிமீர் புடின், உக்ரைனுடனான தங்கள் நாட்டின் எல்லைப் பகுதியில் பாதுகாப்பு மண்டலம் ஒன்றை உருவாக்கவிருப்பதாக தனது வெற்றி உரையில் கூறியிருந்தது நினைவுகூரத்தக்கது. (04)

# பணவீக்கத்தில் மாற்றம் வரும் என எதிர்பார்ப்பு பாகிஸ்தானில் புதிய அரசு கடன் பெற முனைப்பு

பணவீக்கம் அதிகரித்து வரும் நிலையில் பாகிஸ்தான் மத்திய வங்கி வட்டிகளை 22 சதவீதமாகவே தொடரும் என அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் பணவீக்கம் கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி 32.89 வீதம் என்ற நிலையில் உள்ளது. இதனை கருத்தில்கொண்டு, பாகிஸ்தான் மத்தியவங்கி ஆறாவது முறையாக வட்டி வீதத்தை 22 என்ற அளவிலேயே நிலைநிறுத்தியுள்ளது.

இதன் மூலம் 2025 ஆம் ஆண்டு செப்டெம் பருக்குள் பணவீக்க வீதம் 5-7 -ஆக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தானில் புதிய அரசு பதவியேற்று இரண்டு வாரங்களே ஆகியுள்ள நிலையில் பணவீக்கம் கட்டுக்குள் வரத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புள்ளிவிவரங்களின்படி 18 அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாகவும், 14 பொருட்களின் விலைகள் குறைந்துள்ளதாகவும், 23 பொருட்களின் விலைகளில் மாற்றமின்றி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், 1.1 பில்லியன் டொலர் உதவி இறுதித் தவணையைப் பெறுவது தொடர்பாக சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்களுடன் பாகிஸ்தான் உரையாடல்களைத் தொடங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும், சர்வதேச நிதியத்திடம் இருந்து




6 - 8 பில்லியன் டொலர் புதிய கடன்களை பாகிஸ்தான் கோரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (04)

# போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி



(ஹஸ்பர் ஏ. எச்)

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளைஞர் கழகங்கள், சிறுவர் வள நிலையங்கள் இணைந்து போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி, நேற்று (19) இடம்பெற்றது.

நாவற்சோலை சிறுவர் வள நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பேரணியில், குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களை சேர்ந்த இளைஞர்கள், சிறுவர்கள், பொதுமக்கள், அரச அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

பேரணியானது நிலாவெளி பொலிஸ் நிலையத்தினை அடைந்து, நிலாவெளி பொலிஸ் அதிகாரிகளிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வறிக்கையில், நாம், எமது இளைஞர்களை, எமது எதிர்கால சந்ததியினரின் வாழ்வியலை பாதிக்கும் போதைப் பொருள் பாவனையை எமது சமூகத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

இலங்கையில் போதைப்பொருள் பாவனை காரணமாக பல்லாயிரக்காணக்கான மாணவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் சிகிச்சைபெறுவதாக தெரியவருவதுடன், ஆண்டுதோறும் இவ்வெண்ணிக்கை அதிகரித்துவருவது கவலைக்குரிய விடயமாகும்.

போதைப்பொருள்பாவனை காரணமாக கல்வி, பொருளாதாரம், குடும்பம், சமூக அந்தஸ்த்து, ஆயுள் போன்றவற்றை இழப்பதுடன் ஏனைய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள் சுற்றத்தாக்கும் ஆபத்தான நபர்களாக மாற்றும் போதைப்பொருட்களை, எமது சமூகத்தில் இருந்து முற்றாக ஒழிக்கவேண்டியது சமூகப்பற்றுமிக்க இளைஞர்களாகிய எமது கடமையாக உள்ளது.

அந்தவகையில், சமூகத்தின் மத்தியில் உள்ள போதைப்பொருள்பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு.

சமூகத்தின் மத்தியில் போதைப்பொருள் விற்பனைக்கு எதிரான சட்ட செயற்பாடுகள்.போன்றவற்றை இளைஞர்களாகிய நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

மேலும் போதைப்பொருள் விற்பனைக்கு எதிரான தண்டனைகளை கடுமையாக்குமாறு அரசாங்கத்தை வேண்டுவதுடன், உளப்பூர்வமாக போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனையை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், போதைப்பொருள் விற்பனையாளர்களை அடையாளம் காட்டும் நபர்களை பொறுப்புணர்வுடன் பாதுகாக்குமாறும் இலங்கை பொலிசாரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் எமது சமூகச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பையும்வழிகாட்டல்களையும் மேற்கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம்.

எமது பிரதேச இளைஞர்களை எமது சமூகத்தின் கல்வி, பொருளாதாரம் மற்றும் கலாச்சார எழுச்சிக்காக எம்முடன் அணிதிரளுமாறு வேண்டுகின்றோம்.

'போதை நாட்டுக்கும், வீட்டுக்கும் கேடு', 'போதைப்பொருள்பாவனையை எமது சமூகத்தில் இருந்து முற்றாக ஒழிப்போம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து சென்ற பேரணியானது ஜெய்க்கா சிறுவர் வள நிலையத்தை அடைந்து 'போதைப்பொம்மை' எரிப்புடன் நிறைவு பெற்றது.

இந்நிகழ்வில் பங்குபற்றிய இளைஞர்கள் 'நாம் இனிவரம் காலங்களில் போதைப்பொருள் வியாபாரிகளை வெளிப்படுத்துவதிலும் நாம் முன்னிற்போம் ' என தெரிவித்தனர்.

சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டலில், சிறுவர் நிதியத்தின் நிதியுதவியுடன் இவ்விழிப்புணர்வு பேரணி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## றண்விமண – ஜயவிமண வீடுகள் கையளிப்பு



*(எம் எப். நவாஸ்)*

*அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடியிருப்பு மற்றும் ஆலிம்நகர் ஆகிய கிராமவேகர் பிரிவுகளில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட சமுர்த்தி றண்விமண, ஜயவிமண வீடுகளை சமுர்த்திப் பயனாளிகள் இருவருக்கும் கையளிக்கும் நிகழ்வு இன்று (20) நடைபெற்றது.*

*அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்சார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்*

*பிரதம அதிதி அம்பாரை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.அகமது ஷாபிரினால் கையளித்து வைக்கப்பட்டன.*

*எம்.ஏ.சீ.அகமது ஷாபிர் சமுர்த்திப் பணிப்பாளராக நேற்று (19) கடமையை பெறுப்பேற்றமையை அடுத்து, மாவட்டத்தில் முதலாவதாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*இந்நிகழ்வைத் தொடர்ந்து அக்கரைப்பற்று மேற்கு சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர்களினால்*

*சாகுபடிசெய்யப்பட்ட வீட்டுத்தோட்ட பயிர் அறுவடை ஆரம்பமும், வாழ்வாதார மேம்பாட்டுக்கான ருபா 1,000,000.00 பெறுமதியான கடன் தொகை வழங்கலும் இடம்பெற்றன.*

*இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எஹியா ராசித், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், கணக்காளர் ஏ.பீ. அப்துல் ரஹ்மான் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டிருந்தனர்.*



# கோட்டாபயவின் புத்தகத்தை வாசிக்க ஆர்வமில்லை!
## சகோதரர் பசில் ராஜபக்ச பேட்டியில் தெரிவிப்பு

அண்மையில் வெளியிடப்பட்ட கோட்டாபய ராஜபக்சவின் புத்தகத்தை தான் வாசிக்கவில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடந்த செவ்வியில் வைத்தே பசில் ராஜபக்ச இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

தனது சகோதரரிடமிருந்து புத்தகத்தின் பிரதியையோ அல்லது டிஜிட்டல் பிரதியையோ பெறவில்லை என்றும் ஒரு பிரதியை வாங்குவதிலோ அல்லது புத்தகத்தைப் படிப்பதற்கோ ஆர்வம் காட்டவில்லை என்றும் அவர் கூறினார்.

நான் இதுவரை அந்த புத்தகத்தை வாசிக்கவில்லை. ஆனால் அந்த புத்தகம் குறித்து நான் சந்தோசமடைகின்றேன். எனக்கு விரைவில் கிடைக்கும் என்று நினைக்கின்றேன்.

அந்த நூலைப் பற்றி எனக்கு எந்த கோபமும் இல்லை ஆனால், கோட்டபய நூல் ஒன்றை எழுதவுள்ளார் அதற்கான விபரங்களை சேகரிக்கின்றார் என அறிந்தேன், என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கட்சியின் தலைமைப் பொறுப்பு எனக்கு இல்லையென்பதால் என் உறுப்பினர்களை சரியாக வழிநடத்த முடியாமல் போனது என்று கோட்டாபய ராஜபக்ச எழுதியுள்ள விடயம் குறித்தும் பசில் ராஜபக்சவிடம் வினவப்பட்டது.

அப்படி இல்லை. கட்சியின் பொறுப்புக்களை கொடுக்க முடியாது. அப்படி கொடுத்திருந்தால் மஹிந்த கதிரையில் அமர்ந்திருக்கவும் முடியாது. கோட்டாவும் அமர்ந்திருக்கவும் முடியாது. கட்சியைப் பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனைத்தான் நாங்கள் செய்துள்ளோம், என்றும் பசில்



# உலகின் பல நாடுகளிலும் உணவுப் பஞ்சம்
## ஐக்கிய நாடுகள் உணவு பாதுகாப்புப் பிரிவு



ஆபிரிக்க கண்டத்தில் உள்ள 54 நாடுகளில் 33 நாடுகளுக்கு உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் உணவு பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நிலவும் வறட்சியான காலநிலை, உள்நாட்டு யுத்தம் ஆகியவை இதில் தாக்கம் செலுத்துகின்றன.

உலகளாவிய ரீதியில் 45 நாடுகளில் இந்த உணவு பற்றக்குறை காணப்படுகிறது. அவற்றில் 33 நாடுகள் ஆபிரிக்க கண்டத்தில் உள்ளன.

9 நாடுகள் ஆசியாவிலும், 2 லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் தீவுப் பகுதியிலும், ஐரோப்பாவில் ஒரு நாடும் காணப்படுவதாக உலக உணவு அமைப்பு தெரிவிக்கின்றது.

கிழக்கு ஆசியா மற்றும் மேற்கு மற்றும் கிழக்கு ஆபிரிக்காவில் இடம்பெறும் மோதல்கள் உணவுப் பாதுகாப்பின் அபாயகரமான அளவுகளை மேலும் மோசமாக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், வறட்சி நிலைமைகள் தென்னாபிரிக்காவில் உணவுப் பாதுகாப்பின்மையை மோசமாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்காவில், அதிக வெப்பநிலை மற்றும் குறைந்த மழைப்பொழிவு காரணமாக 2024 இல் தானிய உற்பத்தி கடுமையாக குறைந்துள்ளதும் சுட்டிக்காட்டப்படுகிறது. (04)

# மகிழ்ச்சியைக் கொண்டாட ஒரு சர்வதேச தினம்!




ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20ஆம் திகதி உலக மகிழ்ச்சி தினம் கொண்டாடப்படுகிறது.

2012 ஏப்ரலில் பூட்டானின் மன்னராட்சி அரசு, உலகெங்கிலும் உள்ள பிரதிநிதிகளின்




கூட்டத்தைக் கூட்டியது. அதில் மக்களின் மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை ஒரு பொருளாதார அம்சம் போலப் பார்க்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு இந்த நாள் முதன்முதலில் ஐக்கிய நாடுகள் சபையால் தொடங்கப்பட்டது.

தேசத்தில் மகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை நம்பிய பூட்டானால் முதலில் வலியுறுத்தப்பட்ட ஒரு முன்முயற்சியாகும் இது.

முதலாவது அனைத்துலக மகிழ்ச்சி தினம் 2013ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாள் கொண்டாடப்பட்டது. (04)



# காவடியாட்டம் தமிழர்களின் அடையாளம்!

இ.டிலக்ஸன்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் குறிப்பாக தமிழர்கள் வாழுகின்ற பல்வேறுபட்ட நாடுகளிலும் உள்ள முருகன் கோவில்களில் ஒரு முக்கியமான பங்கு காவடியாட்டத்திற்கு உண்டு. மக்கள் ஏதெனும் ஒரு விடயத்தை மனதில் வைத்து அவ்விடயம் நடந்தால் காவடி எடுப்பதாக நேர்த்தி வைப்பார்கள். குறிப்பாக நோய்தீர வேண்டும், குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் இன்னல்கள் நீங்க வேண்டும், குழந்தைப் பாக்கியம் கிடைக்க வேண்டும் அல்லது திருமணம் நடக்க வேண்டும் என பல காரணங்களுக்காக மக்கள் நேர்த்தி வைத்து காவடியெடுப்பது வழக்கம். இதனால் காவடியாட்டத்தில் சிறியவர்கள் இபெரியவர்கள் என அனைத்து வயதினரது பங்கேற்பும் காணப்படுகின்றது.

இன்றைய காலத்தில் காவடிகள் பல்வேறுபட்ட



முறைகளில் அழகுணர்ச்சியுடன் உருவாக்கப்படுகின்றன. எது எவ்வாறாயினும் இதனுடைய அடிப்படைப் பகுதியாக ஒரு தடியே காணப்படுகின்றது. இத்தடியின் இரு முனைகளையும் இணைக்க மஞ்சமுனா மரத்தாலும், புல்லாந்திப் பிரம்புகளினாலும் ஒரு வளைவான அமைப்பு உருவாக்கப்பட்டிருப்பதோடு இதன் மேற்பகுதியில் அழகான குஞ்சங்களுடன் பட்டுத்துணியால் போர்க்கப்பட்டிருக்கும்.

நான்கு மூலைப் பகுதிகளிலும் ஏராளமான மயில் இறகுகளை ஒன்றுசேர்த்திருப்பது காவடிக்கு மேலும் அழகு சேர்க்கின்றது. வளைவுப் பகுதியின் உச்சியில் உயரமான கூம்பு வடிவிலான அலங்காரக் கூறும் அமைந்து காணப்படும்.

பொதுவாக காவடிகளைப் பொறுத்த வரையில் 3அடி அகலமுள்ளதாக இருக்கும். இது 5 கிலோ தொடக்கம் 7 கிலோ வரையிலான நிறை கொண்டதாகக்காணப்படலாம். இருப்பினும் சிறுவர்களும் காவடி எடுக்கின்ற வழமை காணப்படுவதனால் அவர்களுக்காக நிறை குறைவான சிறிய காவடிகளும் இன்று உருவாக்கப்படுகின்றன.

காவடி கட்டப்படுகின்ற பொருள்களை அடிப்படையாகக் கொண்டு அது பல்வேறு வகைகளாக வகைப் படுத்தப்படுகின்றது. பால்க் காவடி, பன்னீர்க் காவடி, மச்சக் காவடி, சர்ப்பக் காவடி, வேல் காவடி, வெள்ளிக் காவடி, கரகக் காவடி, தாளக் காவடி, பாட்டுக் காவடி, சாக்குக் காவடி, நட்சத்திரக் காவடி, வேல் சூழக் காவடி, சயினக் காவடி, ஆஞ்சநேயர் காவடி, ஐயனார் காவடி, ஆபரணக் காவடி, சந்தனக் காவடி, தயிர்க் காவடி, தேன் காவடி, தேர்க் காவடி, அக்கினிக் காவடி, மிட்டாய்க் காவடி, அபிஷேகக் காவடி, சேவல் காவடி, பாம்புக் காவடி போன்ற பல்வேறுபட்ட வகைகளில் காவடி அமைந்திருப்பதனைக் காணலாம்.

பல்வேறு நேர்த்திகளை வைத்து முருகப்பெருமானை நினைத்து தங்களுடைய நேர்த்திக் கடன்களை செலுத்த உருவான இந்த காவடியாட்டம் காலப் போக்கில் இன்று அம்மன், பிள்ளையார், ஐயனார் போன்ற சகல தெய்வங்களுக்கும் உரிய நேரத்தி தீர்க்கும் மரபாயிற்று.

ஆரம்பத்தில் நேர்த்திக்கடன் தீர்க்கும் மரபாகவும், சடங்கியல் சார்ந்து பக்தி பூர்வமாகவும் அனுஷ்டிக்கப்பட்டு வந்த காவடியாட்டமானது இன்று தொழில் முறைக் காவடியாட்டமாகவும் கரகாட்ட நிகழ்வின் ஒரு பகுதியாகவும் இடம்பெற்றுவருவதனைக் காணலாம்.

இதில் ஆட்டக்காரர்கள் மேற்சட்டை அணியாமல் முருகப் பெருமானைப் போல் வேடம் தரித்து ஆடுவர். தொழில் முறைக் காவடியாட்டத்தில் ஆடுபவர்கள் சுழன்றாடுதல், வளைந்தாடுதல், கைவிரித்து ஆடுதல், குனிந்தாடுதல், வில்லாடுதல், வரவேற்க ஆடுதல் எனும் முறைகளைப் பயன்படுத்தி ஆடுகின்றனர்.

வழமையாகத் தோளின் மீது வைத்தே ஆடப்படுவது மரபாகும். ஆனால், தொழில் முறைக்காவடியாட்டக்கலைஞர்கள் அம்மரபிற்குப் புறம்பாக தமது உடலின்பல்வேறு உறுப்புக்களிலும் காவடியை வைத்து ஆடுகின்றனர். காவடி எடுக்கின்ற போது அலகு, பாற்குடம், செடில் அல்லது முள்ளு போன்றவற்றை தெய்வத்திற்கு முன்பாக வைத்து கற்பூரம் கொழுத்தி ஆராத்திகள் காண்பித்து வேண்டுதல் செய்வார்கள்.

அதே சமயம் காவடி எடுப்பவரின் பெயரில் அர்ச்சனைகள் இடம்பெற்று தெர்ப்பை போட்டு, அலகு குத்தி, முள்ளுக் குத்தி காவடி எடுக்கின்ற வழக்கம் காணப்படுகின்றது. காவடியாட்டத்தினுடைய முக்கியமான கலைஞர்களாக பின்வருவோரைக் குறிப்பிடலாம் காவடி கட்டுபவர், காவடி ஆட்டுபவர், உடுக்குப் பாடல் பாடுபவர்கள், தவில், நாதஸ்வரக் கலைஞர்கள், பாட்டுக்காரர் போன்ற கலைஞர்களே காவடியாட்டத்தினுடைய கலைஞர்களாக இருப்பர்.



காவடியாட்டத்தினுடைய முக்கியமான கலைஞராக காவடி கட்டுபவர் காணப்படுகின்றார். ஏனெனில் காவடியாட்டத்தின் முக்கியமான அங்கமாக காவடியே உள்ளதால் காவடி கட்டுகின்றவர் பிரதானமான கலைஞராகக் காணப்படுகின்றார். காவடியினினை முற்றுமுழுதாக வடிவமைக்கின்ற பொறுப்பு இவருக்கே உரித்தானது. காவடியினை உருவாக்குவதில் இருந்து அதனை அழகுபடுத்துகின்ற செயற்பாட்டை செய்பவர் இவரே. இவர்களைப் பொறுத்த வரையில் இதனை பரம்பரை பரம்பரையாக மேற்கொள்கின்றனர்.

கூடுதலாக காவடி கட்டுபவர்கள் மாமிசம் சாப்பிடுவதில்லை. அவர்கள் காவடியினைக் கட்டுவது மாத்திரமல்லாது காவடியினைத் தூக்கி வைக்கின்ற சடங்கினையும் மேற்கொள்கின்றனர். மற்றும் அலகு குத்துதல், செடில் குத்துதல் சார்ந்த சடங்கினையும் இவர்கள் நிறைவேற்றுகின்றனர்.

காவடி கட்டுபவர்கள் இத்தொழிலினை நிகழ்த்து கலைக்கான தொழில்துறையாக மாத்திரம் அல்லாது ஒரு கடவுள் வழிபாடு சார்ந்த சடங்கு என்பதனை உணர்ந்து புனிதமாகவே மேற்கொள்கின்றனர்.



காவடியாட்டத்தினுடைய மற்றைய முக்கிய கலைஞராக உடுக்கடிப்பவர் காணப்படுகின்றார். உடுக்கடித்து காவடியாடுகின்ற மரபு ஆரம்ப காலங்களில் இருந்து இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றது. இருப்பினும் இன்று உடுக்கடித்து பாடல்பாடி காவடி எடுக்கின்ற மரபு சற்றுக் குறைவடைந்து வருவதனைக் காணலாம். இளைய சமுதாயத்தினர் காவடியாட்டத்தின் போது சினிமாப் பாடல்களை பாட முனைகின்ற தன்மையே இதற்கு காரணமாக அமைகின்றது. அதற்காக நாதஸ்வர, தவில் இசைகளை அதிகம் விரும்புகின்றனர். உடுக்குப் பாடல்களில் சினிமா சார்ந்த பாடல்கள் பாடுவது இல்லை.

எது எவ்வாறாயினும் காவடியாட்டத்தினுடைய முக்கியமான கலைஞராக உடுக்கடிப்பவர் காணப்படுகின்றார். உடுக்கடிப்பவரும் உடுக்குப் பாடல் பாடுபவரும் அதே நபராகவே காணப்படுகின்றார்.

காவடியாட்டத்தினுடைய மற்றுமொரு கலைஞராக காவடியாட்டுபவர் காணப்படுகின்றார். காவடியாட்டுபவர்கள் என்ற தனிப்பட்ட கலைஞர்கள் கிடையாது. பொதுவாக இளவயதில் இருப்பவர்கள் காவடியாட்டுபவர்களாக இருப்பர். அதிலும் 25 - 30 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களே இதனை மேற்கொள்கின்றனர்.

அடுத்ததாக காவடியாட்டத்தின் முக்கியமான கலைஞர்களாக நாதஸ்வரம், தவில் வாசிக்கும் கலைஞர்கள் காணப்படுகின்றனர். இன்று பெருமளவு உடுக்குக்குப் பதிலாக நாதஸ்வரம் தவில் போன்றன பயன்படுகின்றன. இவர்களைப் பொறுத்த வரையில் காவடியாடுபவரினைச் சோர்ந்து போகாமல் இறுதிவரை அவர்களை உத்வேகத்துடன் களைப்பினைப் போக்கி ஆட வைப்பவர்களாக உள்ளனர். ஆரம்பத்தில் இவர்கள் முதலாம் காலத்திலே பாடல்களை வாசிக்கின்றனர். போகப்போக காவடியாட்டுபவருக்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதற்காக இரண்டாம் காலம், மூன்றாம் காலங்களில் பாடல்களை வாசிக்கின்றனர்.

ஆரம்பத்தில் காவடிக்காக சின்னமேளக் கலைஞர்களே காணப்பட்டனர் இன்று பொதுவாக எல்லா நாதஸ்வர, தவில் கலைஞர்களும் காவடியாட்டத்திற்கு வாசிக்கின்ற மரபு உருவாகிவிட்டது. பொதுவாக இவர்களால் பக்திப் பாடல்கள் அதிகமாக வாசிக்கப்பட்டாலும், இளவயதினருடைய வேண்டுகோளிற்கு அமைய சினிமாப் பாடல்களை வாசிக்கின்ற போக்கு தற்காலத்தில் மாறிவருகின்றது. இருப்பினும் சில கோயில்களில் காவடியாட்டத்தின் போது சினிமாப் பாடல்கள் பாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே ஒட்டுமொத்தத்தில் நாதஸ்வர, தவில் கலைஞர்கள் காவடியாடுபவர் சோர்ந்து போகமால் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்ற உதவுபவர்களாவே செயற்படுகின்றனர்.

காவடியாட்டத்தினுடைய மற்றுமொரு கலைஞராக காவடிப் பாடல் பாடுபவர் காணப்படுகின்றார். காவடியாட்டத்தின் போது நீண்ட தூரத்தில் இருந்து காவடியாடிச் செல்லுகின்ற போது கூடுதலாக காவடிப் பாடல்கள் பாடப்படுகின்றன. இவை எளிமையான சொற்களால் அமைந்த பாடல்களாக இருக்கின்றன. அதே போல தாளம் போடுபவரும் காவடியாட்டத்தில் பங்கேற்கும் கலைஞர் என்றே குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும். அவர் பாடல்களிற்கு ஏற்ப தாள மெட்டுக்களைப் போடுகின்றார்.

காவடியாட்டத்தின் போது பார்வையாளர்களுடைய வகிபங்கு என்பது முக்கியமானதாகக் காணப்படுகின்றது. காவடியாட்டத்தின் பார்வையாளர்கள் எனும் போது காவடி எடுப்பவரின் குடும்பத்தினர், உறவினர்கள், ஊர்மக்கள் மற்றும் கோயில் அடியவர்கள் போன்றோர் உள்ளடங்குவர். அதே சமயம் காவடியின் போது வீதிகளால் செல்பவர்கள் குழந்தைகள், வெளிநாட்டவர்கள் போன்றோர் அதனைப் பார்த்து இரசிப்பதனைக் காணலாம். குறிப்பாக குழந்தைகள் இவ்வாறான விடயங்களைப் பார்ப்பதில் ஆர்வம் உடையவர்களாகவும், அதனைப் பார்த்து இன்புறுகின்ற தன்மையினையும் அவதானிக்கலாம். அது மட்டுமன்றி தெய்வம் ஏறப்பெற்று மக்கள் கலையாடுகின்ற தன்மையும் காணப்படுகின்றது. எனவே காவடியாட்டத்தின் போது காவடியாடுபவர் மாத்திரமன்றி பார்வையாளர்களுடைய வகிபங்கும் அதிகமாகவே உள்ளது.

இன்று காவடியாட்டத்தின் போது பல சவால்களை

தொடர்ச்சி மறுபக்கம்....




# காவடியாட்டம்...

எதிர்கொள்ள நேர்கிறது. ஒரு கோயிலில் இருந்து இன்னொரு கோயிலுக்குக் காவடி ஆடிச் செல்கின்ற போது வீதிகளில் வாகனங்கள் எந்நேரமும் செல்வதனால் அதனை ஒழுங்கான முறையில் நகர்த்திச் செல்வது என்பது சவாலிற்குட்பட்டதாக அமைகின்றது. அதே போன்று ஆலயத் திருவிழாக்களின் போது பக்தர்கள் நிறைந்திருப்பதால் உள் வீதி, வெளி வீதிகளில் காவடியினை ஆடி முடிப்பதும் சிரமத்தின் உச்சம்.

அத்துடன் காவடியாட்டத்தின் போது காவடியாடுபவர் மாத்திரமல்லாது காவடியினைக் கட்டுபவர்களும் சவால்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக காவடி கட்டுகின்ற போது



ஆட்கள் பற்றாக் குறையாகக் காணப்படுவதனால் அதனை விரைவாக செய்து முடிப்பதென்பதும் சவாலானதாகும். குறிப்பாக தூக்குக் காவடியினை ஒருவர் கட்டுவதென்பது சாத்தியமில்லை. காவடி கட்டுகின்ற போது காவடியின் நான்கு மூலைகளிலும் மயிலிறகுகள் சேர்த்துக் கட்டப்படுவது வழக்கம் ஆனால், அதிக மயிலிறகுகளை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

இதனைவிட பெரியவர்கள், சிறுவர்கள் போன்றவர்கள் நீண்ட தூரம் நடந்து செல்லுகின்ற போது களைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பும் காணப்படுகின்றது. இவ்வாறான சவால்கள் நிறைந்திருக்கின்ற போதும் அதனைப் பொருட்படுத்தாமல் தமது நேர்த்திக்கடனைச் செய்வதற்காக பக்தர்கள் காவடியினை ஆடிமுடிக்கின்றனர்.

காவடியாட்டமானது அன்று முதல் இன்று வரை புனித வழிபாட்டின் அடையாளமாக இருந்தாலும்கூட இன்றைய கால கட்டத்தில் நவநாகரிக மோகத்தின் செல்வாக்கு அதிகரித்திருப்பதினால் காவடியாட்டத்தின் போக்கும் மாறி வருகின்றது. அதாவது, ஆரம்பத்தில் நாதஸ்வர இசைகளில் பக்திமயமான பாடல்கள் வாசிக்கப்பட்டன. ஆனால், இன்று இளைஞர்களிடையே சினிமா மோகம் தலைதூக்கியிருப்பதனால் சினிமாப் பாடலினுடைய ஊடுருவல் காவடியாட்ட நாதஸ்வர இசைகளில் இடம்பெறுகின்றுது.

அதே போன்று காவடி ஆடுகின்ற முறைமை மற்றும் ஆடைகள் அணிகின்ற தன்மைகளிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. சினிமாப் பாடல்களுக்கு எவ்வாறு ஆடுவார்களோ அதே போல இன்று காவடியாடுவதற்கும் முனைகின்றனர். மேலும் சடங்கியல் முறைக்காக காவடி எடுப்பது குறைவடைந்து ‘அவன் காவடி எடுக்கிறான் நாங்களும் காவடி எடுப்பம்’ என்று போட்டிக்காக காவடி எடுக்கும் போக்கும் உருவாகியிருக்கின்றது. இவை எல்லாவற்றையும் விட காவடியின்போது மது பாவித்து ஆடுகின்ற நிலைமையும் வந்துவிட்டது. இவ்வாறான காரணங்கள் காவடியாட்டத்தின் புனிதத் தன்மையை கேள்விக்குட்படுத்துகின்றன.

தமிழர் தொன்மம் மிக்க பல நாட்டாரியல் கலைகள் இன்று மறக்கடிக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்ற காலச் சூழலில், நம்மரபின் ஆதி அடையாளமாக நிலைத்து நிற்கும் காவடியாட்டத்தினை கறை படியாத புனிதத் தன்மையுடன் பாதுகாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

# ஆளுநர் செந்தில் தொண்டமானுடன் தூதுவர்கள் கலந்துரையாடல்



(ஹஸ்பர் ஏ.எச், நூருல் ஹுதா உமர்)

சுவிட்சர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு மரியாதை நிமித்தமாக வருகை தந்து மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நல்லிணக்கம் குறித்து மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் கலந்துரையாடல் நடத்தினர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கு ஆதரவளிப்பதாகவும் தூதுவர்கள் ஆளுநரிடம் இணக்கம் வெளியிட்டனர். இதில் மாகாண பிரதம செயலாளர் ஆர். எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுனர் செயலக செயலாளர் எல்.பி மதநாயக்க உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# நாவிதன்வெளியில் வாழ்வாதார உதவிகள்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சின் இழப்பீடுகளுக்கான அலுவலகம் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து "நம்பிக்கைக்கான நூல்" மற்றும் "வாழ்க்கைக்கான வெளிச்சம்" திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்த வாழ்வாதார உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நேற்று (19) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகியின் வழிகாட்டலுக்கு அமைய, உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், நீதி அமைச்சின் இழப்பீடுகளுக்கான பணிப்பாளர் அனுராதி பெரேரா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கிருபைராஜா திலகராணி, மாவட்ட இழப்பீட்டிற்கான உத்தியோகத்தர் எம்.ஆர். ஆஸாத் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது, கைத்தறி நெசவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நெசவு உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் மெழுகுவர்த்தி உற்பத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பயிற்சிகள் மற்றும் உற்பத்தி இயந்திரங்கள் என்பனவும் வழங்கிவைக்கப்பட்டன.

# சிறார்களுக்கான மனக்கணித போட்டியும் பரிசளிப்பும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

SIP அபாகஸ் ஸ்ரீ லங்கா நிறுவனம் தனது முதலாவது பிராந்திய அபாகஸ் மனக் கணித போட்டியை கிழக்கு மாகாணத்தில் அண்மையில் ஒழுங்கு செய்திருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றிருந்த போட்டி மற்றும் பரிசளிப்பு விழாவில் ஆசிரியர்களும் சிறார்களும் கலந்து கொண்டனர்.






# முஸ்லிம் பாடசாலைகளுக்கு சுற்றுநிருபம் வெளியீடு

(கற்பிட்டி - சியாஜ்)

பாடசாலை விடுமுறை காலத்தை வினைத்திறன் மிக்கதாய் களிப்பதற்குரிய வழிகாட்டல் என்ற தலைப்பில் கல்வி அமைச்சு முஸ்லிம் பாடசாலை அதிபர்களுக்கு சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாட்டின் முஸ்லிம் பாடசாலைகளுக்கு 2024 ஆம் கல்வி ஆண்டின் முதலாம் தவணையின் முதற்கட்ட விடுமுறை 2024 மார்ச் 8 முதல் ஏப்ரல் 16 வரை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை முஸ்லிம்கள் 2024 மார்ச் 12 தொடக்கம் ஏப்ரல் 4 வரை புனித ரமழான் நோன்பினை முன்னிட்டு கல்வி அமைச்சு முஸ்லிம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கியுள்ளது.

அதற்கமைய, விடுமுறை காலத்தில் பாடசாலை சூழலை டெங்கு நுளம்புகள் பரவாதவாறு சுத்தமாக வைத்திருத்தல், தற்போது நிலவும் வரட்சி நிலை காரணமாக பாடசாலை வளாகத்தினுள் உள்ள மரம் செடிகள் இறந்து விடாது நீரை ஊற்றி பாதுகாத்தல் மற்றும் பாடசாலையின் சகல உடைமைகளையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் ரமழான் நோன்பு காலத்தில் மாணவர்கள் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் ஆகியோருக்கு ஆன்மீக செயற்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலைகளில் காணப்படும் வசதி வாய்ப்புக்கு ஏற்றவாறு நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு ஒன்றினை ஏற்பாடு செய்து, "நோன்பின் மாண்புகள்" பற்றி இஸ்லாமிய அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்தச் செய்யுமாறும் எமது நாட்டின் நலனுக்காகவும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாகவும் சமாதானத்துடனும் வாழ்வதற்காகவும் பிரார்த்தனை செய்யுமாறும் சுற்று நிருபத்தின் ஊடாக அதிபர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# சம்மாந்துறை கோட்டக்கல்வி காரியாலயம் புதுப்பொலிவு



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் உள்ள சம்மாந்துறை கோட்டக் கல்வி காரியாலயம் புதுப்பொலிவு பெற்று வருகிறது. சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானாவின் வழிகாட்டலில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக இக்கோட்ட கல்வி காரியாலயம் புதுப் பொலிவு பெற்று சிறப்பாக காட்சியளிக்கின்றது.

அங்கு ஒன்று கூடல் மண்டபம் ஏனைய மண்டபங்கள் மற்றும் கல்விசார் தகவல்கள் மிசன் விஷன் என்பன நவீன முறையில் காட்சிப்படுத்தபட்டுள்ளன.

வலயக்கல்விப் பணிமனையின் புதன்கிழமை கல்வி அபிவிருத்திக் கூட்டமும் பரீட்சார்த்தமாக நடைபெற்றது.

இதன் திறப்புவிழா விரைவில் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறு சம்மாந்துறை போல நாவிதன்வெளி இறக்காமம் ஆகிய கோட்டங்களும் இவ்வாறாக புதுப் பொலிவு பெற வேண்டும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கேட்டுக்கொண்டார்.

இதற்காக ஒத்துழைத்த மாகாண வலய கல்வித்திணைக்களத்தினர் அனைவருக்கும் கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.நசீர் நன்றிகளைத் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2024 இல் வெளியிடப்பெற்றது.